## பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

# குற்றம் சாட்டப்பட்டவர்கள் அ.தி.மு.க. தொடர்புடையவர்களே!










| | |
|---|---|
| A1 சபரிராஜன் | A2 திருநாவுக்கரசு |
| A3 சதீஷ்குமார் | A4 வசந்த் |
| A5 மணிவண்ணன் | A6 பாபு |
| A7 ஹேரோன் பால் | A8 அருளானந்தம் |
| A9 அருண்குமார் | |

**பொ**ள்ளாச்சி பாலியல் வழக்கில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தொடர்புகொண்டுள்ளார்கள் என்று அறிந்தவுடன், அவர்களைக் காப்பாற்ற பழனிச்சாமி மேற்கொண்ட பித்தலாட்டங்களுக்கும் அளவில்லை; மூடி மறைக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கும் கணக்கில்லை!

அப்பொழுது தி.மு.க.வும் இதர எதிர்க்கட்சிகளும் நடத்திய போராட்டங்களின் விளைவாகத்தான் வேறு வழியின்றி பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. அதனை மக்கள் மறந்திருப்பார்கள் என நினைத்துக் கொண்டு நாடகமாடிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. இந்தப் பித்தலாட்டத்தை முதலமைச்சர் சுட்டிக் காட்டி பேசியதும் ஓடோடி வந்து அவதூறுகளை அள்ளி வீசி சென்றிருக்கிறார் பித்தலாட்டக்கார பழனிசாமி! பாதிக்கப்பட்ட பெண்ணின் தரப்பு பிப்ரவரி 24 ஆம் தேதி உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் தருகிறார். அந்தப் புகார், குற்றம்சாட்டப்பட்டவர்தரப்புக்கு எடப்பாடியின்போலீஸால் தரப்படுகிறது. புகார் தந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள். இப்படி தாக்கியவர் யார்? அ.தி.மு.க.வைச் சேர்ந்த ‘பார்’ நாகராஜன். பொள்ளாச்சி நகராட்சி 34 ஆவது வார்டு அ.தி.மு.க. அம்மா பேரவைச் செயலாளர் இவர். புகார் கொடுத்தவர்களை இவர் தாக்கினார். இந்த வழக்கில் இவர் கைதுசெய்யப்பட்டார். இவர் யார் என்று தெரிந்ததும், மறுநாளே ஜாமீனில் வெளியில் வந்துவிட்டார். இவரும் அ.தி.மு.க. அமைச்சர் வேலுமணியுடன் இருக்கும் படங்கள் இணையத்தில் இருக்கின்றன. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் இப்போது தண்டனை பெற்றுள்ள அனைவருக்கும் இவர் நண்பர்.

இதனை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையாகக் கொடுத்த பிறகுதான், அவர் மீது நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டு நீக்குகிறார் பழனிசாமி. ஆக, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அ,தி.மு.க. தொடர்புடையவர்கள்தான் என்பதற்கு இந்தப் புகைப்படங்களே ஆதாரம்.

